செய்தி வெளியீடு எண் 986 நாள் 13.11.2008

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை மேற்கு வங்க நகர்ப்புற வளர்ச்சி மற்றும் நகராட்சித் துறை அமைச்சர் திரு. அசோக் பட்டாச்சார்யா சந்தித்து தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு பாராட்டு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை, மேற்கு வங்க நகர்ப்புற மற்றும் நகராட்சி வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அசோக் பட்டாச்சாரியா அவர்கள் இன்று (13.11.2008) தலைமைச் செயலகத்தில் சந்தித்து தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் மற்றும் பிற திட்டங்களின் வாயிலாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பாக விவாதித்தார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் பாதாள சாக்கடை திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளதாலும் அரசின் கொள்கை முடிவின்படி சுமார் ரூ. 1200 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக 45 நகராட்சிகளில் செயலாகத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதையும், நாட்டிலேயே முன்னோடி திட்டமாக 125 நகராட்சிகளில் நவீன ஆட்டு இறைச்சிக்கூடங்களும் 57 நகராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைத்தல் போன்றவற்றினையும் கேட்டறிந்தார்.

மேலும், மத்திய அரசின் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள நகரங்களில் ரூ. 2688.95 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடை திட்டங்கள், சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு செயலாக்கப்பட்டு வருவதை ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் பல்வேறு திட்டப்பணிகள் ரூ. 661.12 கோடி மதிப்பீட்டிலும், நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் ரூ.2360 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தமிழகத்தில் உள்ளாட்சித் துறை மூலமாக சிறப்பாக செயல்படுத்தி வருவதையும் மேற்கு வங்க நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து பாராட்டு தெரிவித்தார்.

மேலும் சென்னை மாநகர மேயராக திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பணியாற்றிய காலத்தில் சென்னை மாநகரத்தில் திடக்கழிவு மேலாண்மையை தனியார் மூலம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதை வியப்புடன் கேட்டறிந்து தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் பாராட்டு தெரிவித்தார். இதுபோன்ற சிறப்பான திட்டங்களை மேற்கு வங்காள மாநிலத்தில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள விருப்பதாக தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப. மற்றும், நகராட்சி நிர்வாகத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் திரு.செந்தில்குமார், இ.ஆ.ப. ஆகியோர் உடன் இருந்தனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.